செய்தி வெளியீடு எண்.58 நாள்.26.01.2017

**திருவள்ளுர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் நடுக்குத்தகை ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டார்.**

~~~~~

திருவள்ளுர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் நடுக்குத்தகை ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.01.2017) கலந்துகொண்டார்.

ஆகஸ்ட் 2016 - டிசம்பர் 2016 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து, திட்ட அறிக்கை, சுகாதாரம், கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்து, குழுக்களுக்கு ஒத்துழைப்பு, கழிப்பறை இல்லாதோர் விவரப்பட்டியல், திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மையக் கழிப்பறைகள், திடக்கழிவு மேலாண்மை திட்டம். மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதமமந்திரி கிராம சாலைகள் திட்டம் II, அம்மா பூங்கா மற்றும் அம்மா உடல் பயிற்சி கூடம், தாய் திட்டம் 2016-17, ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப்பபணிகள் முன்னேற்றம் மற்றும் நிதிசெலவின விவரங்கள் குறித்து விவாதித்து, மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், பொது விநியோகத் திட்டம்/களப்பணியின் விளைவாக உறுதி செய்யப்பட்ட குடும்ப அட்டைதாரர்களின் இறுதிப்பட்டியல், இதர பொருட்கள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கிராமசபை கூட்டங்களுக்கு பிற துறைகளை சார்ந்த அலுவலாகளும் கலந்து கொண்டு, துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது “பொது விநியோகத் திட்டத்தில் மாவட்டத்தில் 5.50 இலட்சம் குடும்ப அட்டைகள் உள்ளது. இவை அனைத்தும் ஸ்மார்ட் கார்டுகளாக மாற்றி வழங்கப்படவுள்ளது, அதற்கு ஆதார் எண்ணை குடும்பத்தில் உள்ள அனைவரும் பதிவுசெய்ய வேண்டும், பெறாதவர்களும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். நியாய விலைக்கடைகளில் கைபேசி எண்களை கொடுத்து பொருட்கள் வாங்குவது மூலம் முறைகேடுகளை தவிர்க்க முடியும். அனைவரும் தங்கள் ஊராட்சியை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். அனைவரும் தனிநபர் கழிவறை அமைத்து பயன்படுத்த வேண்டும். இதற்காக அரசு சார்பாக கழிவறை கட்ட 12 ஆயிரம் மானியமாக வழங்கி வருகிறது. மக்கள் தங் சுற்றுபுறங்களை தூய்மையாக வைத்துக்கொள்வது முக்கியம். தங்கள் வீடுகள் அருகில் குப்பைகளை கொட்டாமல் அவற்றை முறையாக கழிவுசெய்வதன் மூலம் கொசு புழக்கள் உற்பத்தி ஆவது தடுக்கப்பட்டு அதன் மூலம் உருவாகும் டெங்கு, பன்றிகாய்ச்சல் போன்ற நோய்கள் உண்டாகுது. மேலும் உணவு உண்ணும் போது கைகளை நன்றாக கழுவி சுத்தமாக வைத்திருந்து நோய் தொற்றுகளில் இருந்து காத்துக்கொள்ள வேண்டும். மேலும் புயலால் பாதிக்கப்பட்டு பல மரங்கள் விழுந்தது எனவே மக்கள் அனைவரும் மரக்கன்றுகளை நட்டு அவற்றை நீருற்றி பராமரிக்க வேண்டும்” என்று கூறினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~